2003 ஏப்ரல் 11]

என்று தமிழகத்தினுடைய பழங்குடி மக்களுடைய சார்பில் அந்தக் கருத்தை அந்த De-limitation Commission-க்கு எடுத்துக் கூறுவதற்கும் நாம் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம். 2001 ஆம் ஆண்டினுடைய மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி சட்டமன்றங்களின் அந்தத் தொகுதிகளை எல்லாம் மாற்றியமைக்க வேண்டும் என்ற ஒரு கருத்தும் இருக்கிறது. இவை குறித்து 17 ஆம் தேதி டெல்லியிலே பேசி முடிவு செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 244 திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

244—

கும்பாபிஷேகம்

***20229—திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் தொகுதி, குமாரகோயில், அருள்மிகு குமாரசுவாமி திருக்கோயில் கும்பாபிஷேகம் நடத்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் தொகுதி, குமாரகோயில், அருள்மிகு குமாரசுவாமி திருக்கோயில் கும்பாபிஷேகம் செய்வதற்கான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. ஓராண்டு காலத்திற்குள் கும்பாபிஷேகம் செய்யப்படும் என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் தொகுதி, குமாரகோயில், அருள்மிகு குமாரசுவாமி திருக்கோயில் திருவிதாங்கூர் மன்னர்கள் காலத்தில் கட்டப்பட்டு பல நூறு ஆண்டுகள் பழமையுள்ளதும், பத்மநாபபுரம் அரண்மனை அருகிலுள்ள மிகச்

[2003 ஏப்ரல் 11

சிறப்புமிக்க கோயிலுமாகும். கேரளா பகுதியில் இருந்தும்கூட தினமும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் வந்து வழிபடுகிற வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தக் கோயில் பல ஆண்டுகளாக கும்பாபிஷேகம் நடத்தாமலும், இந்தக் கோயில் குளங்கள் தூர் வாராமலும் மிகப் பழுதடைந்து காணபபடுகிறது. தமிழகத்தில் அனைத்துக் கோயில்களிலும் ஒரு கால பூசை நடத்தி அன்னதானம் போன்ற சிறப்புத் திட்டங்கள் நடத்துகின்ற இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, இந்தக் கோயிலுக்கும் கும்பாபிஷேகம் நடத்தி, கோயில் குளத்தைத் தூர் வாருவதற்கு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன். மேலும், சிறப்புமிக்க அந்தத் திருக்கோயில் பத்மநாபபுரம் அரண்மனைக்கு அருகில் இருந்துவருவதால் அந்தக் கோயிலினுடைய பெருமையை சிறப்புப்படுத்த, அந்தக் கோயிலினுடைய குளத்தை தூர் வாரி, அந்தக் கோயிலில் ஒரு தங்கக் கொடிமரம் நிறுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருவதாகத் தெரிகிறது. உடனடியாக அரசு அந்தக் கொடிமரத்தை நிறுத்துமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-15

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், சுசீந்திரம் இணைக்கப்பட்ட மற்றும் இணைக்கப்படாத திருக்கோயில் பத்மநாபபுரம் தொகுதிக்குட்பட்ட வேலிமலை அருள்மிகு குமாரசுவாமி திருக்கோயில் ஒரு மேஜர் திருக்கோயில் ஆகும். இத்திருக்கோயிலுக்கு கேரள மாநிலத்திலிருந்தும், கன்னியாகுமரி மாவட்டத்தின் பல இடங்களிலிருந்தும், பக்தர்கள் வருகை புரிந்து தரிசனம் செய்து வருகிறார்கள். இத்திருக்கோயிலின் செம்பு கொடிமரம் பழுதடைந்துள்ளதாலும், கும்பாபிஷேகம் செய்து பல ஆண்டுகள் ஆனதாலும் திருப்பணி வேலைகள் செய்ய ரூ. 34 இலட்சம் செலவில் மொத்தம் 12 பணிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. முன்பு அங்கிருந்த செம்பு கம்பிவடத்தை மாற்றி இப்போது தங்க முலாம் பூசிய கொடிமரம் ஏற்பாடு செய்வதற்கு திருப்பணி நிதியாக ரூ.8,70,371 வங்கியில் முதலீடு செய்யப்பட்டுள்ளது. முதல் கட்டமாக பழுதடைந்த கொடிமரத்தை மாற்றி, புதியதாக கொடிமரம் நிறுத்தும்பொருட்டு வனத் துறையிலிருந்து 50 சதவீதம் மானிய விலையில் தேக்கு மரம் வாங்கப்பட்டு, மரம் size செய்யப்பட்டு பதப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், தங்கக் கொடிமரப்

2003 ஏப்ரல் 11]

பணிக்கு தமிழ்நாடு பூம்புகார் கைத்திறன் தொழில் வளர்ச்சிக் கழகத்தில் விலைப்புள்ளி பெற்று, தக்க அனுமதி பெற்று, தங்கக் கொடிமரம் திருப்பணி விரைவில் தொடங்கப்படும். மேற்படி திருப்பணிக்கு. திருப்பணிக் குழு உறுப்பினர்கள் தேர்வு செய்யும் முதல்நிலைக் கூட்டம் துணை ஆணையர் செயல் அலுவலர் தலைமையில் 2-4-2003 அன்று நடைபெற்றுள்ளது. இத்திருக்கோயில் உதவித்தொகை நிர்ணய வருமானம் ரூ.17,96,324 ஆகும். இத்திருக்கோயிலுக்கு 1 ஏக்கர் 13 சென்ட் நிலமும் உள்ளது. மானாவாரி என்று சொல்லக்கூடிய 79 ஏக்கர் நிலத்தில் மானாவாரி பாறை உள்ளது. தங்கத்தேர் செய்வதற்காக, தங்கக் கொடிமரம் செய்வதற்காக ஏறக்குறைய 25 இலட்சம் ரூபாய் அளவில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அங்கேயிருக்கின்ற குளங்களைத் தூர் வாருவதற்கு தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறநிலையத் துறைக்குச் சொந்தமான ஆலயங்களிலே இருக்கின்ற அத்தனை குளங்களும் தூர் வாரப்படும் என்று சொல்லியிருக்கின்றார்கள். வருமாண்டு இந்தக் குளங்களும் தூர் வாரப்படும் என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அண்ணாவி.

திரு. ப. அண்ணாவி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொட்டியம் தொகுதியிலுள்ள மருதகாளியம்மன் கோயிலிலுள்ள குளத்தைத் தூர் வாருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைக் கேட்கிறேன்.

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொட்டியம் தொகுதி மட்டுமல்ல, தமிழ்நாட்டிலேயிருக்கின்ற அனைத்துக் குளங்களையும் தூர் வாருவதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். அதனுடைய அடிப்படையில் வருகின்ற ஆண்டுகளில் தூர் வாரப்படும் என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 245, திரு. பி.எஸ். அருள், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.